செ. கு. எண்: 064 நாள்: 28.04.2018

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 28.4.2018

சென்னை, தண்டையார்பேட்டையில் இயங்கி வரும் தனியார் பள்ளியைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் **25.4.2018** அன்று மஹாராஷ்ட்ரா மாநிலம், புனே அருகிலுள்ள முல்ஸி அணையில் குளிக்கச் சென்ற போது திரு. சுடலைஈஸ்வரன் என்பவரின் மகன் செல்வன் S.சரவணகுமார், திரு. கலீம் அன்சாரி என்பவரின் மகன் செல்வன் K.தானிஷ் ராஜா மற்றும் திரு. கணேஷ் என்பவரின் மகன் செல்வன் G.சந்தோஷ் ஆகிய மூன்று பேரும் நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த மாணவர்கள் செல்வன் சரவணகுமார், செல்வன் தானிஷ் ராஜா மற்றும் செல்வன் சந்தோஷ் ஆகியோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் செய்தி குறித்து அறிந்தவுடன், தமிழ்நாடு அரசின் உயரதிகாரிகளை உடனடியாக புனே மாவட்ட நிருவாகத்திடம் தொடர்பு கொண்டு, மீட்புப் பணிகளை துரிதபடுத்துமாறு உத்தரவிட்டேன்.

இந்த துயரச் சம்பவம் குறித்து உரிய விசாரணை மேற்கொண்டு, சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு பள்ளிக் கல்வித் துறைக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

மேலும், இந்த துயரச் சம்பவத்தில், உயிரிழந்த மூன்று மாணவர்களின் குடும்ப சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**